**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நத்தம்.**
**முன்னிலை : திருமதி.J.ஆஃப்ரீன் பேகம், M.Com., L.L.M.,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நத்தம்.**

**2026ம் ஆண்டு மார்ச் திங்கள் 16ம் நாள் திங்கட்கிழமை**
**திருவள்ளுவராண்டு 2057 ஸ்ரீவிசுவாவசு வருடம், பங்குனி திங்கள் 02ம் நாள்**
**குற்ற பல்வகை மனு எண்.178/2026**
**CNR No.TNDG100002732026**

சாதிக்பாட்ஷா 29/2026
த/பெ.சீனி,
105, அண்ணா நகர், நத்தம் தாலுகா,
திண்டுக்கல் மாவட்டம். .. மனுதாரர்/எதிரி

// எதிர் //

காவல் சார்பு ஆய்வாளர்,
நத்தம் காவல் நிலையம்,
குற்ற எண்.107/2026
சட்டப்பிரிவுகள் 296(b), 309(6), 351(3) BNS.
.. எதிர்மனுதாரர் / புகார்தாரர்

**எதிரி காவல்படுத்தப்பட்ட நாள் 06.03.2026**

நீதிமன்றக் காவலில் உள்ள எதிரியை பிணையில் விடுவிக்கக் கோரி எதிரி தரப்பில் வழக்குரைஞர் திருமதி.M.துர்காதேவி அவர்கள் 480 BNSSன் படி இப்பிணை மனுவினைத் தாக்கல் செய்துள்ளார்.

இப்பிணை மனு இன்று என் முன்னர் விசாரணைக்கு வந்த போது, அரசு தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை –I திருமதி.P.அமர்ஜோதி அவர்களும் மனுதாரர் / எதிரி தரப்பில் வழக்குரைஞர் திருமதி.M.துர்காதேவி அவர்களும் நேரில் ஆஜராகி வாதிட்டதைக் கேட்டறிந்தும், வழக்கின் ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**உத்தரவு**

1) மனுதாரர் / எதிரியின் மீது சுமத்தப்பட்ட குற்றம் சட்டப்பிரிவுகள் 296(b), 309(6), 351(3) BNSன் படியான குற்றமாகும்.

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M., Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M., Date: 2026.03.16 13:20:55 +0530

2) மனுதாரர்/ எதிரி தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்குரைஞர் அவர் தரப்பு வாதத்தில் எதிரி நீதிமன்றம் பிறப்பிக்கும் நிபந்தனைகளை பின்பற்றி நடக்க மனுதாரர் தயாராக இருப்பதாகவும், மனுதாரரை பிணையில் விடுவிக்கவேண்டியது அவசியம் என வாதிடப்பட்டுள்ளது.

3) அரசு தரப்பில் வழக்கு புலன் விசாரணையில் இருந்து வருவதாலும், குற்றசெயலில் தொடர்ந்து ஈடுபடக்கூடும் என்பதாலும், எதிரியின் மீது ஏற்கனவே நத்தம் காவல்நிலைய கு.எண்.368/2019 u/s.397 இ.த.சவின் கீழ் வழக்கு உள்ளதாலும், எதிரி வழக்கு விசாரணைக்கு ஒத்துழைக்கமாட்டார் என்பதாலும், எதிரிக்கு பிணை வழங்க ஆட்சேபணை செய்யப்பட்டுள்ளது.

4) இருதரப்பும் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் யாவும் இந்நீதிமன்றம் கவனமாக பரிசீலினை செய்யப்பட்டது. எதிரியின் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளானது சட்டப்பிரிவுகள் 296(b), 309(6), 351(3) BNSன் படியான குற்றமாகும். அரசு தரப்பில் மனுதாரர் / எதிரியின் மீது திருட்டு வழக்கு நிலுவையில் உள்ளதாலும், மேலும் இது போன்ற குற்றச்செயலை தொடர்ந்து ஈடுபட்டுக்கொண்டு இருப்பதாலும், மேலும், மனுதாரர் / எதிரியை பிணையில் விட்டால் மேலும் இது போன்ற குற்ற செயலில் ஈடுபடுவார் என அரசு தரப்பில் கூறுவதை கருத்தில் கொண்டும், வழக்கின் விசாரணை ஆரம்ப கட்ட நிலையில் இருந்து வருவதாலும், எதிரியின் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றத்தின் தன்மையை கருத்தில் கொண்டும், வழக்கின் இச்சூழலில் எதிரியை பிணையில் விடுவிக்க இயலாது என இந்நீதிமன்றம் தீர்வு செய்கிறது.

**இறுதியாக, இப்பிணை மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.**

2026ம் ஆண்டு மார்ச் திங்கள் 16ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.03.16 13:21:03 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், நத்தம்.